**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) திருவில்லிபுத்தூர்</u>**

EP.No: 69/2023 நாள் 23.06.2026

**ம.சா.2, திரு. அண்ணாதுரை**

**மா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இம்மனுவில் உள்ள மனுதாரர் என்னுடைய மனைவி ஆவார். இந்த வழக்குபற்றி விபரம் எனக்கு நன்றாக தெரியும்.என் மனைவி தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் வி.கே. கன்ஸ்ட்ரக்ஸன் என்ற பெயரில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகர் பகுதியும் அதன் சுற்றுவட்டார பகுதியிலும் கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருகிறார் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மாதம் ஒன்றுக்கு ரூ.1 லட்சம் வரை சம்பாத்தியம் செய்து வருகிறார் என்பதை காண்பிக்ககூடிய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை. இந்த மனு நிலுவையில் இருந்து வருகின்ற போது என் மனைவியானர் இதே எதிர்மனுதாருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் 2வதாக தாக்கல் செய்யப்பட்ட நிறைவேறுதல் மனு எண்.64/2025 என்பதை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அந்த மனு தான் எமசாஆ.1 என்று சொன்னால் அது சரிதான். என் மனைவியானவர் ஒரே வழக்கு தீர்ப்பாணை மீது இரண்டு நிறைவேறுதல் மனுக்களை என் மனைவி தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் ஒரு மனுவானது எதிர்மனுதாரருக்கு உரிய சொத்தின் பேரிலும் மற்றொரு மனுவானது பணம் தரவேண்டியதற்காக வேண்டி தாக்கல் செய்துள்ளார். எந்த வழக்கு மீது இந்த நிறைவேறுதல் மனுவை என் மனைவியானவர் தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் அப்படியில்லை. அ.வ.எண்.128/2019 ஆகும். அந்த வழக்கில் எந்த தேதியில் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்கு பற்றி விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் மனுதாரர் என் மனைவி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 23rd day of June 2026

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.